செ.வெ.எண்: 633 நாள்: 25.09.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்பு குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் சமூக பாதுகாப்புத்துறையின் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (25.09.2019) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பிற்காக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் குழந்தை தொழிலாளர்கள் யாரேனும் பணி அமர்த்தப்பட்டுள்ளார்களா என்பது குறித்து மாதந்தோறும் ஆய்வு செய்து அறிக்கை அளிக்கவும், அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெற்ற சிறப்பு கிராமசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்களை உரிய முறையில் கடைபிடிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து குழந்தைகள் இல்லங்களிலும் மருத்துவ முகாம்களை தொடர்ந்து நடத்தவும், குழந்தைத் திருமணம் நடைபெறாமல் தடுக்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், குழந்தை திருமணம் தடுத்தல் தொடர்பான விழிப்புணர்வு கையேடுகளை தயாரித்து பொது மக்களிடம் வழங்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி. இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் இளையராஜா மற்றும் குழந்தைகள் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**